மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 ★ பக்கங்கள் 8 16-8-59 விலை 13 காசுகள் ★ ஒலி 44

இலங்கைத் தீவிலே தமிழன் சோற்றுக்கு அலைகிறான்!

திபெத் அகதிகளுக்கு செலவிடப்படும் தொகை

10,00,000

நேரு பரம்பரை வாழ்கிறது, சுப்பிரமணியம் பரம்பரை சரகிறது!

இதற்குப் பெயர் தானே வடக்கு, தெற்கு?

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களும், தமிழகத்திலுள்ள ஏனைய காங்கிரஸ் தலைவர்களும் "வந்தேமாதரம்" பாடி "பாரதமாதவுக்கு ஜே" போட்டு —"அகண்ட பாரதமே ஒன்று, ஒன்று" என்று தினம் தினம் மேடை தவறாமல் பேசி வருகிறார்கள்!

வடநாடும், தென்னாடும் ஒன்றுதான்! பிரித்துப் பேசுவது பேதமை, அறியாத்தனம்! நேரு பெருமகனாருக்கு தென்னவர், வடவர் என்ற வேற்றுமை துளியுமில்லை! ஆசியாவின் ஜோதிக்கு இரண்டு கண்களுண்டு! அவற்றில் ஒரு கண் தென்னாடு, மற்றொரு கண் வட நாடு" என்று நிதி அமைச்சர் பெருமையோடும், பூரிப்போடும் நாள் தவறாமல் பேசிக்கொண்டே இருக்கிறார்!

',புள்ளி விபரம் தெரியாத அண்ணாதுரைக்கு சொன்னால் புரியாது! மக்களே! புள்ளிவிபரம் தெரிந்தநான் பேசுகிறேன்! நம்புங்கள்! நாமெல்லாம் பாரதப் புத்திரர்கள்! நம்புங்கள்!" என்று முழங்கிக் கொண்டே இருக்கிறார்!

"ஆனால் நேரு பண்டிதரோ—யார் சொன்னது — வடக்கும், தெற்கும் ஒன்று என்று எவர் சொன்னது" என்று தினம் தினம்—பேச்சால் அல்ல— செயலால் வற்புறுத்திக் கூறியவாறே இருக்கிறார்! அடிக்கடி மக்கள் சபையில் அறிவித்துக் கொண்டே இருக்கிறார்!

சில தினங்களுக்கு முன்பு கூட மக்கள் சபையில் தென்னவர்கள் வேறு, வடவர்கள் வேறு என்பதைத் திட்டவட்டமாக, தெளிவாக, எல்லோருக்கும் புரியும்படியாகப் பேசி இருக்கிறார்!

மக்கள் சபையில் ஒரு உறுப்பினர், "திபெத் அகதிகளுக்கு அளிக்கப்படும் உதவியைப் போல் இலங்கை, மலேயா அதிகளுக்கும் உதவி அளிக்கப்படுமா?" என்று நேருவைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்! அதற்கு நேரு துரையவர்களோ, "இரண்டும் வேறுவேறு பிரச்னை —முற்றிலும் மாறுபட்ட பிரச்னை" என்று பதிலளித்திருக்கிறார்! அதோடு மட்டுமல்ல, "இலங்கை அகதிகளுக்கு உதவி அளிக்க இயலாது" என்றும் கூறி இருக்கிறார்!

நாம் நேரு துரையவர்களைக் கேட்கவில்லை — நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களைக் கேட்கிறோம்! இரண்டும் வெவ்வேறு பிரச்னை என்பதை விளக்கிச் சொல்ல முடியுமா? எப்படி வெவ்வேறு பிரச்னையாகும்?

இலங்கை அகதிகளும், திபெத் அகதிகளும் ஒரே நாட்டின் அகதிகளாக இருக்கும்போது எப்படி மாறுபட்ட பிரச்னையாக கருத முடியும்?

இதுதான் வடக்கு, தெற்கு என்று நேரு சொல்லுகிறார்! நமது நிதி அமைச்சரோ இல்லை இல்லை என்கிறார்! இதில் எது உண்மை!

திபெத் அகதிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது! திபெத் அகதிகளை இருகரம் கூப்பி அழைத்து அவர்களுக்கு நல் வாழ்வளிக்கப்படுகிறது! ஆனால் இலங்கை அகதிகளையோ காலால் உதைத்து உதைத்து தள்ளுகிறார்! இது ஏன்? எதனால்? "இதற்குப் பெயர்தான் வடக்கு, தெற்கு! புரியவில்லையோ" என்கிறார் நேரு!

திபெத் அகதிகள் வாழ, வள

(6-ம் பக்கம் பார்க்க)

தெற்கு தேய்கிறது

வடக்கு வாழ்கிறது

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 16—8—59 | ஒலி 44

தாசிகள் நடத்திய பத்தினி மாநாடு !

தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகவே ஒரு சாபக் கேடு இருந்து வருகிறது! திறமையுள்ளவர்கள் மதிக்கப் படுவதில்லை, தகுதியுள்ளவர்கள் போற்றப்படுவதில்லை!

இந்த இழி நிலை இன்று நேற்று வந்ததல்ல—தமிழ் மண் தோன்றிய காலத்திலிருந்தே வந்ததாகும்! கோழையை வீரன் என்று புகழ்வார்கள்—வீரனை கோழை என்று தூற்றுவார்கள்! நல்லவனை நம்பிக்கை துரோகி என்பார்கள்! நம்பிக்கை துரோகியை "நாணயஸ்தன்" என்று புகழ் மாலை சூட்டுவார்கள்! மேதையை சோதா என்பார்கள்—சோதாவை மேதை என்பார்கள்! இந்த நாடு ஒரு விசித்திரமான நாடு! இந்த விசித்திரம் மனித இனம் வாழும் இடத்திற்கெல்லாம் சொந்தம் என்றாலும் நம்முடைய தமிழ் நிலத்திற்கு மட்டும் அதிக சொந்தமானதாகும்!

இந்த விசித்திரம் எல்லாத் துறைகளுக்கும் சொந்தம் என்றாலும் அரசியல் துறைக்கும், எழுத்துத் துறைக்கும் மிக நெருங்கிய சொந்தமானதாகும்! சென்னையில் இயங்கி வரும் தமிழ் எழுத்தாளர் சங்கம் இதற்கு தக்க சான்று!

சென்னையில் இயங்கி வரும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் தமிழ் எழுத்தாளர்கள் எத்தனை பேர் அங்கம் வகிக்கின்றார்கள் என்பதை அறிந்தால் வெட்கமும், துக்கமும். வேதனையும் தான் ஏற்படும்! டாக்டர் சிதம்பரநாதன் போன்ற ஒரு சில தமிழ் அறிஞர்களைத் தவிர அங்கே அங்கம் வகிப்பவர்களில் எத்தனை பேர் எழுத்தாளர்கள்? எத்தனை பேர் தமிழ் எழுத்தாளர்கள்?

"அம்புஜம் வந்தாள், அவள் ஆத்துக்காரரோடு சமுத்திரக்கரைக்குப் போனாள்" என்று எழுதுபவர்களெல்லாம் தமிழ் எழுத்தாளர்கள்! "நமஸ்தே ஜீ" போடுபவர்களெல்லாம் தமிழ் பேரறிஞர்கள்! இதை நினைக்கும் போது தமிழ்ப் பற்றுள்ள எழுத்தாளர்கள் அத்தனை பேரும் முழக்கயிற்றைத் தான் நாட வேண்டும்!

எழுதவே தெரியாதவர்களெல்லாம் எழுத்தாளர்கள், தமிழ் மொழி என்று சொல்லவே தெரியாதவர்களெல்லாம் தமிழ் எழுத்தாளர்கள்! இந்த கேலி கூத்து இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் நடக்காது!

தமிழகத்தில் தலை சிறந்த எழுத்தாளர்கள் எத்தனையோ பேர்களுண்டு! ◦வர்களெல்லாம் எழுத்தாளராக மதிக்கப்படுவதில்லை! எழுத்தாளர் சங்கத்திலும் அங்கம் வகிக்கவில்லை! அரசியல் காரணத்திற்காக பெரும்பாலான சிறந்த எழுத்தாளர்களை யெல்லாம் தீண்டத்தகாவர்களாக நினைத்து ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்! அவர்களை எவர் ஒதுக்கினாலும் அவர்களுடைய புகழ் ஒருநாளும் குன்றி விடாது! அவர்கள் அனைவரும் மக்கள் எழுத்தாளர்கள் என்பதை இந்த வயிற்றுப் பிழைப்பு எழுத்தாளர்கள் உணர வேண்டும்!

தமிழ் எழுத்துலகத்திற்கே ஒரு புதுமையையும் ஒரு புத்துணர்ச்சியையும் ஏற்படுத்திய நமது அறிஞர் அண்ணா அவர்கள் இல்லாமல் சென்னையில் ஒரு மாநாடு நடைபெற்றது! அதைப் பற்றிக் கூட நமக்குக் கவலையில்லை! தமிழ்க் கொலைஞர்கள் மாநாட்டில் தமிழ்க் கலைஞர்களுக்கு எப்படி இடம் கிடைக்கும்? கிடைத்தால் கூட நமக்கு தமிழ்க் கொலை புரியும் எண்ணம் தான் எப்படி வரும்?

தமிழ்க் கொலைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மாநாடு நடத்தக் கூடாது என்று நாம் சொல்லவில்லை, கசாப்புக்கடைக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஜீவகாருண்ய மாநாடு நடத்தக்கூடாது என்று சொல்லித் தடுக்க எவருக்குமே உரிமையில்லை! ஆனால் கசாப்புக் கடைக்காரர்கள் ஜீவகாருண்ய மாநாடு நடத்தி அதிலே இராமலிங்க அடிகளை தூற்றினால், காந்தியாரின் காருண்யத்தைப் பழித்தால். புத்தரை இகழ்ந்தால் எந்த பக்தன் தான் பொறுப்பான், அந்த இழிவைத் தாங்கிக் கொள்வான்!

எனவே இந்தத் தமிழ்க் கொலைஞர்கள் தமிழ் எழுத்தாளர் மாநாடு நடத்தியதைப் பற்றி நமக்கு ஏதும் கவலை இல்லை! ஆனால் தமிழுக்கே உயிரான மறைமலையடிகளைப் பற்றி தூற்றுவது என்றால் எந்தத் தமிழனுடைய உள்ளம் தான் கொதிக்காது! எந்தத் தமிழ் எழுத்தாளனுடைய நெஞ்சம் தான் குமுறாது!

யாரோ ஒரு ரா, ஸ்ரீ யாம்! அவர் தமிழ் எழுத்தாளராம்! அவர் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேசினாராம்! "மறைமலை யடிகள் எழுதியது தமிழா" என்றும் கேட்டாராம்! இதைத் தமிழ் எழுத்தாளர்களும் வெட்கமில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்! என்னே தமிழ் நாடு! என்னே தமிழ்ப்பற்று!

"ரா"வும், "ஸ்ரீ"யும் கலந்திருக்கும் போதே அவரைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் அனுமதித்திருக்கக் கூடாது! அந்தக் கலப்புத் தமிழ் எழுத்தாளரை அனுமதித்ததே தவறு! சரி ஒழிந்து போகட்டும்! அனுமதித்தீர்கள்! அதையாவது மன்னித்து விடலாம்! அங்கே தமிழ்ப் பேரறிஞர்களை இழித்தும் பழித்தும் பேசியதை எப்படி அனுமதித்தீர்கள்? அங்கே, அந்த கலப்புத் தமிழர் எழுத்தாளரிடம் மன்னிப்பு வாங்கி இருக்க வேண்டாமா? டாக்டர் சிதம்பரநாதன் போன்றவர்கள். கண்டனக் கணைகளைத் தொடுத்தார், "ரா". ஸ்ரீ களை சாடினார் என்பதை அறிய மகிழ்கிறோம்! என்றாலும் அந்த மாநாட்டை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்! உடனே அந்த சங்கத்திலிருந்தும் விலகிக் கொண்டிருக்க வேண்டும்! அப்போது இதைச் செய்யத் தவறினாலும் இப்போதாவது தமிழறிஞர் சிதம்பரநாதன் அவர்கள் செய்ய வேண்டும்!

"ராஸ்ரீ"களுக்கு என்ன தமிழ் வேண்டி இருக்கிறது நமஸ்தேகளுக்கு என்ன தமிழ் எழுத்தாளர் மாநாடு வேண்டி இருக்கிறது! அதை எப்படி நாம் அனுமதிக்க முடியும்! அதை எப்படி தமிழ் உலகம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

தமிழ்ப் பெருந்தகை மறை மலையடிகளைப் பழித்த "ராஸ்ரீ" போன்ற கலப்புத் தமிழ் எழுத்தாளர்களை இன்று கண்டிக்காவிட்டால் நாளை நாம் தூற்றப்படுவோம் இகழப்படுவோம்!

தமிழ் மேதையைப் பழித்த ராஸ்ரீ மன்னிப்புக் கேட்க வேண்டும், தவறு என்று அடி பணிய வேண்டும்! தமிழ்ப் புலவர்களே! தமிழ்ப் பற்றுடைய இளைஞர்களே தமிழ் எழுத்தாளர்களே! உடனே இந்தக் கோரிக்கையை எழுப்புங்கள்! அந்த ராஸ்ரீயை மறை மலையடிகளின் தாளுக்கு மாலையிட்டு மன்னிப்பைக் கேட்கச் சொல்லுங்கள்! இல்லையேல் தமிழ் எழுத்துலகம் மானத்தோடு வாழ முடியாது, இந்தக் கலப்புத் தமிழ் எழுத்தாளர்களிடம் மண்டியிட்டுத் தான் வாழ வேண்டும்!

இளைஞர்களே! தமிழ்ப் பெருங்குடி மக்களே! மண்டியிடப் போகிறீர்களா? கண்டனக் கணைகளைத் தொடுத்து மன்னிப்பை பெற்று மானத்தோடு வாழப் போகிறீர்களா?

வசதியும், வாய்ப்பும் இருக்கிறது என்ற காரணத்தால் சிலர் திமிர் பிடித்து அலைகிறார்கள்! கர்வம் கொண்டு அலைகிறார்கள்! அவர்களை அடக்குங்கள்! அவர்களுடைய திமிரை ஒடுக்குங்கள்!

சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கும் தாசிகள் நடத்தும் பத்தினிகள் மாநாட்டிற்கும் என்ன வித்தியாசம்!

வில்லேருழவர்களைப் பகைத்தாலும் சொல்லேருழவர் தி. மு. க. வை பகைக்காதே !

வில்லால் அடிபட்ட புண் மாறும்! சொல்லால் அடிபட்ட புண் ஆருது !

அமைச்சர்களுக்கு சி. பி. சிற்றரசு எச்சரிக்கை!

(சென்னை, திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தின் நான்காவது ஆண்டுவிழாவின் போது சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு ஆற்றிய சொற்பொழிவு.)

தலைவர் அவர்களுக்கும் இங்கு கூடியுள்ள தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய தங்கை உங்களனைவருக்கும் மழையைத் தாங்கிக் 'கொள்ளும் சக்தி உண்டு என்று கூறினார்கள்! உங்கள் உள்ளம் நனைந்து விட்டால் அதை ஆற்றிக் கொள்ளலாம்! ஆனால் நீங்கள் போட்டிருக்கும் சட்டை, வேட்டி நனைந்து விட்டால், மாற்றிக் கட்டிக்கொள்ள கூட வேறு வேட்டி சட்டை இல்லாத நிலைமையில் இருப்பவர்கள் இங்குள்ளவர்களில் பலர்! ஆகையால நீங்கள் மழையில் நனைவது கண்டு எனது மனம் மிகவும் கவலைப்பட்டது!

காமராஜருக்கு குறள் தெரியாது என்று சொல்லப்பட்டது. அவர்தான் நமது குரலைப் பிடித்து நெறித்துக்கொண்டிருக்கின்ற வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அவருக்கு எப்படி குறள் தெரியும்!

குறளைப் படித்துப் பின்பற்றுபவர்களும் உண்டு. படிக்காமலேயே பின்பற்றுபவர்களும் உண்டு!

வள்ளுவர் என்ன சொன்னார்! செவிக்கு உணவில்லாத போது சிறிது வாய்க்கும் ஈயப்படும் என்ருர்! வாய்க்குத்தான் உணவு வேண்டும், செவிக்கு உணவு தேவையில்லை என்று சொல்பவன் இருந்தாலென்ன செத்தாலென்ன! எனக்கு சோறுதான் முக்கியம். டிபார்ட்டிதான் வேணும். அதுவும் நீலகிரிக்குத் தான் போவேன். இப்படிச் சொல்லுகிறவர்கள் இருந்தாலென்ன செத்தாலென்ன இதை நான் சொல்லவில்லை! வள்ளுவர் சொல்லி யிருக்கிருர்!

(சிரிப்பு)

அடுத்தபடியாகப் பாருங்கள் வள்ளுவர் என்ன சொல்லி யிருககிருர். "காமராஜரே! யாரைப் பகைத்துக் கொண்டாலும் பகைத்துக் கொள். தி. மு. க. காரரை மட்டும் பகைத்துக் கொள்ளாதே" என்று!

"வில்லேருழவர் பகைகொளி
னும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை"

வில்லையும், அம்பையும் வைத்துக் கொண்டிருப்பவனைப் பகைத்துக் கொண்டாலும் பகைத்துக் கொள். வில், வேந்தனின் அம்பு உன் உடம்பில் புகுந்து மறுபக்கம் வந்தாலும் அந்தப் புண்ணை ஆற்றிக்கொள்ளலாம்! ஆனல் இந்த (சொல்லேறுழவர்களின்) தி. மு. க. காரரை பகைத்துக் கொண்டால் அவர்களது சொல்லம்பினுல் உன்னுடைய மந்திரி சபை மடிந்து விடும், மடிந்து விடும் என்று சொல்லியிருக்கிருர்!

அடுத்தபடியாக என்ன சொல்லி யிருக்கிருர்.

"இதனை இதனுல் இவன்
முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன் கண் விடல்"

பொதுமக்கள் உன்னைதெரியாமல் சட்ட சபைக்கு அனுப்பி விட்டார்கள்! இது எப்படி இருக்கிறது! இரட்டை மாட்டு வண்டியைத் தான் உனக்கு ஓட்டத் தெரியும்! உன்னைப் போய் கார் ஓட்டச் சொன்னுல் நீ என்ன செய்வாய். மசால் வடையை தின்பவனிடம் பூந்தியைக் கொடுத்தால் அவன் என்ன செய்வான்? நீந்தத் தெரியாதவனை தண்ணீரிலே தூக்கிப் போட்டால் அவன் என்ன செய்வான்? பல்லில்லாதவன் கிட்ட பட்டாணியை கொடுத்தா அவன் என்ன செய்வான்? அதுபோலத் தான் மக்கள் உன்னிடம் ஆட்சியை ஒப்படைத்திருக்கிருர்கள்! நீ சொல்கிருய் தி. மு. க. காரர்களின் கட்டை விரலையெல்லாம் எடுத்து விட வேண்டும் என்று! கட்டை விரல் என்ன ஐந்து விரலையுமே எடுத்து விடேன். எங்களுக்குத் தான் பேச வாய் இருக்கிறதே? நாங்கள் பேசப் பேசஎழுதி எழுதித் தள்ள எத்தனையோ பேர் காத்திருக்கிருர்களே!

நீங்களும்தான் திருக்குறளைப் போற்றுகிறீர்கள்! எப்படிப் போற்றுகிறீர்கள! 'திருக்குறளை யானைமேல் வைத்து, அதை ஊர்வலமாகக் கொண்டு வருகின்றீர்கள்! இதுதான் திருக்குறளை நீங்கள் போற்றும் விதம்!

இது எப்படி இருக்கிறதென்ருல் செங்கல்பட்டுக்கு போகும் ஒருவன் பிராட்வேக்குப் போகிருன்! அங்கு செங்கல்பட்டு சென்னையிலிருந்து முப்பத்தியைந்து மைல் தூரத்தில் இருக்கிறது என்று ஒரு கைகாட்டி மரம் இருக்கிறது! அதைப் பார்த்துவிட்டு செங்கல்ட்டுக்குப் போவானு அல்லது அந்த கைகாட்டி மரத்திற்கு பூமாலை போட்டு கற்பூரத்தைகொளுத்தி கன்னததிலடித்துக் கொள்வானு? இது மாதிரிதான் இருக்கிறது நீங்கள் குறளைப் போற்றும் விதம்!

மதுரை நகரசபை சுவற்றிலே குறள் எழுதப்பட வேண்டுமென்று நமது தோழர் தேசிகமணி கொண்டுவந்த தீர்மானத்தை நமது மாஸ்கோ தோழர்களும், பொதுவுடைமைவாதிகளுமான நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் எதிர்த்தார்களாம்! பொதுவுடமை பொதுவுடமை என்று நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூறுகிருர்கள்! இந்தப் பொதுவுடைமையைப்பற்றி வள்ளுவர் நன்ருகச் சொல்லியிருக்கிருர்! அவர் எதைப்பற்றி சொல்லவில்லை! எல்லாவற்றைபற்றியுமே சொல்லியிருக்கிருர்!

முதலாளிகளைப் பார்த்து நீங்கள் இவ்வளவு பணம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டால் ஆண்டவன் எங்களுக்கு கொடுத்தான் என்று சொல்கிருர்கள்! அதேநேரத்தில் எதிர்வீட்டு ஏகாம்பரத்தைப் பார்த்தால் இரவிலே அவனது குழந்தை தூங்கிய பின்பு வேலையிலிருந்து திரும்பி வருகிருன். குழந்தைகாலையில்எழுந்திருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

விரைவில் போர் முழக்கம்! மிக விரைவில் போர் முழக்கம்!

இளைஞர்களே தயாராகுங்கள்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

கும் முன்பே வேலைக்குப் போய் விடுகிறான்! வாரத்திறகு ஒரு முறை தான் குழந்தை தன் தகப்பனைப் பார்க்கிறது! இப்படி எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன! இதே நேரத்தில் செல்வந்தன் லோகநாதனைப் பார்த்து நீ இப்படி இருக்கிறாய்! ஆனால் எதிர் வீட்டு ஏகாம்பரம் மிகவும் எளிய நிலையிலிருக்கிறானே என்று கேட்டால் ஆண்டவன் அவனை அப்படி எழுதினான்! என்னை இப்படி எழுதினான் என்கிறான்! உன்னை இப்படி எழுதியதும் அவனை அப்படி எழுதியதும், யாருடா அவன் என்று கேட்டால் பிரம்மா என்று கூறுகிறான்!

"ஒருவனை செல்வந்தனாகவும் மற்றொருவனை ஏழையாகவும் இருக்கும்படி எழுதியது யார்? பிரம்மாவா? கொண்டாடா அந்த பிரம்மாவை! உறிடா நார் நாராக" என்று சொன்னான் வள்ளுவன்! இதைத்தான்

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்று வெகு அழகாகச் சொல்லியுள்ளார்!

பிச்சையெடுக்கிறான் ஒருவன். அவனுடைய காட்சி எப்படி வருணிக்கப்படுகிறது பாருங்கள்! பல்லெல்லாம் தெரியக் காட்டி, தெரியாத ரேகையெல்லாம் தெரியும்படி காட்டி இரண்டு கரங்களை நீட்டி மானத்தைவிட்டு எண் ஜான் உடலை ஒரு ஜாண் உடலாக்கி பிச்சையெடுக்கிறான். இப்படிப்பட்ட காட்சி எவ்வளவு கேவலமாக உள்ளது.

எதையும் மிக விளக்கமாக எடுத்து பொது மக்களுக்கு விளக்குகிறான் தி.மு.க. காரன்! எல்லாத்துறையிலும் நூற்றுக்கு தொண்ணூறு மார்க் வாங்கி விடுகிறான் தி. மு. க. காரன்!

காங்கிரஸ்காரனுக்கு தி.மு.க. காரன் மீது ஒரே வயிற்றெரிச்சல்! ஏன்வயிற்றெரிச்சல்" நம்ப என்ன அவங்க வீட்டு பெண்ணை நம்ப பையனுக்கு கட்டிக் கொள்ள மாட்டோமென்று சொன்னோம்! இல்லை நம்ப பெண்ணை அவங்க வீட்டு பையனுக்கு கொடுக்கமாட்டோமென்றுசொன்னோம்? இல்லையே? அவங்க வயிற்றெரிச்சலுக்கு காரணம் இந்த தி. மு. க. காரனுங்க நம்பகிட்ட வரலையே என்பதுதான்!

பொதுக் கூட்டம் நடத்துறோம்! லைசென்சு கேட்கிறோம்! போலீஸ் இலாகா முடியாது என்று சொல்லுது! அதென்ன காங்கிரஸ்காரன் நடத்தினா லைசென்ஸ் கொடுக்கிறாயே? ஆமாம் கொடுக்கிறோம்! அப்ப எனக்கு ஏன் கொடுக்க மாட்டேனென்கிறாய்? எங்க அண்ணன் காங்கிரஸ்காரன் கூட்டம் நடத்தினா ஸ்டேஜ் பக்கத்திலேயே லாரி கூட போக முடியும்! நீங்க கூட்டம் நடத்தினா பர்லாங் கணக்கிலே ஒரே ஜனக்கூட்டமா இருக்கிறதே! அதனால் தான் கொஞ்சம் யோசிக்கிறோம்! எங்களை என்ன செய்யச்சொல்றீங்க? வெள்ளைக்காரன் இருந்தான்! காங்கிரஸ்காரர்களை வெளுக்கச் சொன்னான்! அப்படியே செய்தோம்! இன்றைக்கு அவங்க இருக்காங்க! நாளைக்கு நீங்க வந்து அவங்களை வெளுக்கச் சொன்னா அப்படியே செய்யுறோம்!

தி. மு. கழகம் போலீஸ்காரர்களை குற்றம் சொல்லவில்லை! அவங்க எல்லாம் நம்பள வங்கத்தான். அவங்க ஏன் போலீஸ் வேலையில் இருக்காங்கன்னா அவங்களுக்கு கிடைச்சது அந்த வேலைத்தான்! ஏன்னா ஐயர் வாளெல்லாம் முன்னாலேயே போய் ஆபீஸ் நாற்காலிகளிலே உட்கார்ந்து விட்டாங்க! ஐயர் வாளெல்லாம் எப்படி நாற்களிலே போய் உட்கார்ந்து விட்டாங்க தெரியுமா? வெள்ளைக்காரன் இங்கிலீஷ் படிக்க வேண்டுமென்று சொன்ன போது கிருஷ்ணசாமி ஐயர் நம்ம வீட்டு ராமசாமியைப் பார்த்து என்ன சொன்னார். இங்கிலீஷ் பாஷை நமக்கெதற்கடா. அது நீச்சபள் அல்லவோ என்று சொன்னார், இதைக் கேட்ட அப்பாசாமி ஆமாம் ஆமாம் நம்ப கிருஷ்ணஷாமி ஐயர் சொல்வது சரி தான். இங்கிலீஷ் நமக்கெதற்கு. பிடிச்சுக்கடா இரண்டு மாட்டை. போடா வயக்காட்டுக்கு என்று சொல்லி ஏர் அடிக்க சென்று விட்டான் அப்பாசாமி. ஆனால் இங்கிலீஸ் நீச்சபள் என்று சொன்ன கிருஷ்ணசாமி ஐயர் இங்லீஷை கற்றுக் கொண்டு ஆபீஸிலே போய் நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டார்! ஏர் அடித்துக் கொண்டிருந்த நம்ம அப்பன் ஒரு நாள் கலெக்டர் ஆபீஸிற்கு போன போது இங்லீஷ் நீச்சபள் என்று சொன்ன கிருஷ்ணசாமி ஐயர் நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு உத்தியோகம் பார்ப்பதை பார்த்தார்! ஐயோ இந்த கிருஷ்ணசாமி ஐயர் அல்லவா இங்லீஷ் நீச்சபள் என்று சொன்னாரே. இவர் அல்லவா நாற்காலியிலே உட்கார்ந்து உத்யோகம் பார்க்கிறாரே, என்று உடனே ஓடி வந்து பிள்ளையைப பார்த்து இங்லீஷ் கற்றுக் கொள்ளடா என்று சொல்லி வேலைக்கு மனுப்போடச் சொல்கிறார்! மனுப் போட்டால் என்ன வேலை இருக்கிறது, அங்கே தான் கிருஷ்ணசாமி ஐயரும் ராமசாமி ஐயரும் உள்ளே போய் நாற்காலிகளில் உட்கார்ந்து விட்டார்களே! பாக்கி இருப்பது என்ன வேலை. பங்கா இழுக்கும் வேலை தான். சம்பளம் பதினெட்டு. அந்த வேலைக்கு பட்டையாக நாமம் போட்டுக் கொள்ள வேண்டும்! அதற்கு நாமக்கட்டி வாங்கவே மாதம் நாலு ரூபாய் ஆகிவிடும், நாமம் குழைத்து போட்டுக் கொண்டால் எங்கு அழிந்து விடுமோ என்று அறைத்துப் போட்டுக் கொள்ள வேண்டும். ஐயர் முன்னே போவார். பின்னாலே பங்கா இழுப்பவர் பெட்டியை தலை மேல் வைத்துக் கொண்டு சாட்க்ஷாத் வெங்கடேச பெருமாள் போல பின்னாலே போவான். ஐயர் உள்ளே போய் நாற்காலியிலே உட்கார்ந்து கொள்ளுவார், நம்பளவர் வெளியிலே உட்கார்ந்து கொண்டு பங்கா இழுக்க வேண்டும், கொஞ்சம் காற்று குறைந்தாலும் ஐயர் உள்ளே இருந்து அடே ராமசந்திரா என்னடா காற்று வரலை என்று கேட்பார். இது தான் தமிழன் நிலை.

தமிழின் இரண்டு வகையில் கெட்டான். வருகின்றவர்களை எல்லாம்வாவாஎன்று அழைத்து வாழவைத்தான். வடக்கே உள்ள நகரங்களில் உள்ள ஒரு வீட்டிலாவது திண்ணை இருக்கிறதா என்று பாருங்கள்? இங்கிருந்து வடக்கே செல்லும் ஒருவர் மழை வந்தால் ஒரு வீட்டில் ஒதுங்கி நிற்பராயின் உடனே வடநாட்டான் "கியாரேகியரே மதருஸி—ஜாவ் ஜாவ்" என்று சொல்வான்! ஆனால் தமிழ் நாட்டிலே உள்ள பழைய வீடு

(5-ம் பக்கம் பார்க்க)

வேண்டுமா? வேண்டாமா?

காமராஜர் பதில் சொல்லட்டும்!

"சென்னை நகர சபை பிரயாண வரியைப்பற்றி எந்தத் திட்டத்தையும் சர்க்காருக்கு அனுப்பிவைக்கவில்லை" என்று நமது மாநிலத்து முதலமைச்சர் கனம் காமராஜர் செய்திப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்!

சென்னை நகர மேயரும், நகர சபை தி. மு. க. கட்சித் தலைவர் திரு. ஜீவரத்தினமும் தன்னை வந்து சந்தித்துப் பேசியதாகவும், அதன் பிறகு எந்தத் திட்டத்தையும், தரவில்லை என்றும் கூறி இருக்கிறார்!

நமது மாநிலத்தின் முதல்வர் இப்படியெல்லாம் பேசுவதால் மக்களிடத்தில் நல்ல செல்வாக்கை அடைந்துவிடலாமென்றோ, தி. மு. க. வின் செல்வாக்கைக் குறைத்து விடலாம் என்றோ கனவு காண வேண்டாம்!

சென்னை நகரைச் சீர்திருத்த பிரயாணவரி விதித்தால் பயன்படும் என்று காங்கிரஸ் கௌன்சிலர்கள் முடிவுக்கு வந்தார்கள்! அவர்கள் தீர்மானம் மூலம் சென்னை சர்க்காருக்கு இந்த கோரிக்கையை ஆண்டு தோறும் அனுப்பி வைத்துக் கொண்டே இருந்தார்கள்! அதேபோல் தி.மு.க. வும் ஆட்சிக்கு வந்த பின்பு இந்தத் தீர்மானத்தை கொண்டு வர முயற்சித்தார்கள்! ஆனால் குழந்தைகளைப் பெற்று பாலூட்டி வளர்த்த தாயே தன் குழந்தையை கொல்லுவது போல் இந்தப் பிரயாண வரியை எதிர்த்தார்கள்! ஏழைகளைப் பாதிக்கும் என்று புலம்பினார்கள்! இப்போது சொல்லுகிறார்கள் தி. மு. க. திட்டம் தரவில்லை என்று!

காமராஜர் நம்மை இழித்துப் பேசினார், பழித்துப் பேசினார்! தி.மு.க. வுக்கு வரி கூட போடத் தெரியவில்லையே என்று கிண்டல் செய்தார்!

மேயரும், ஜீவரத்தினமும் முதலமைச்சரை சந்தித்த போது "கொண்டு வாருங்கள், இதுவரை அது பயன் படாமலேயே போய்விட்டது, நீங்களாவது இதைச் செய்யுங்கள்" என்றும் சொன்னாராம்! அதன்பிறகு வெளியில் இந்த வரியை எதிர்த்துப் பேசியதுதான் உலகம் அறியுமே!

இப்போது தி. மு.க. திட்டம் தரவில்லை என்று சொல்லுகிறார்!

பிரயாண வரியைப் பற்றி காமராஜர் என்ன நினைக்கிறார்! ஏழைகளை பாதிக்குமா, பாதிக்காதா? என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்! இதை விட்டு விட்டு பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்று வேஷம் போடுவது நல்லதல்ல!

பிரயாண வரி வேண்டுமா? வேண்டாமா? காங்கிரஸ் காரர்களே பதில் சொல்லட்டும்!

பிறகு தீர்மானத்தை ஆதரிக்கட்டும்! இதைவிட்டு தி. மு. க. மீது பழிசுமத்த எண்ணினால் அது நிச்சயமாகப் பலிக்காது, பலிக்காது!

குறள் தெரியாத மந்திரிகள் !

நம் குரல்வளையைப் பிடிக்கும் மந்திரிகள் !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் வெளியிலே இரண்டு திண்ணைகள் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தத் திண்ணைகள் எதற்கு கட்டப்பட்டிருக்கின்றன. இரவில் தங்க இடமின்றி யாராவது வந்தால் அவர்கள் இந்தத் திண்ணையில் படுத்து நூங்கி விட்டு பொழுது விடிந்தவுடன் எழுந்து செல்லட்டும் என்று இந்த திண்ணைகள் கட்டப்பட்டன! பிச்சைக்காரர்களாயிருந்தால் அவர்கள் கொண்டு வரும் உணவை சாப்பிட வெளிச்சம் வேண்டுமே என்றுதான் வீட்டுக்கு வெளியே வாயிற்படியில் இரண்டு விளக்குகளை ஏற்றி வைக்கும் வழக்கம் நம் தாய்மார்களிடம் இருந்து வந்தது, இன்றும் இந்த வழக்கம் தென்னாட்டில் காணப்படும் பழைய வீடுகளில் உள்ளது. இப்போது தான் அந்தப் பழக்கம் ஒழிந்து புதிய முறைகளில் வீடு கட்டப்படுகிறது,

தமிழன் கெட்டதற்கு இரண்டாவது காரணம் என்னவென்றால் பாழாப்போன ஜாதி! நமக்கு நாமே உதவி செய்து கொள்கிறோமாவென்றால் அது தான் இல்லை. காரணம் ஜாதி! நாயுடு. முதலியார் இப்படிப பல பிரிவினைகள்! முதலியார் என்றால் பொன்னேரி முதலியார், பூந்தமல்லி முதலியார். கொண்டை கட்டி முதலியார், அக்கரை முதலியார், இக்கரை முதலியார் அவுத்திக்கீரை முதலியார் இப்படி முதலியாருக்குள்ளே எத்தனை முதலியார் நாயுடு என்றால் வளையல்கார நாயுடு, அந்த நாயுடு, இந்தநாயுடு என்று எத்தனை நாயுடு! தெருவிலே ஒருவரை வேறொருவர் தாக்கினால் அதைப் பார்க்கிறார் ஒரு நாயுடு! உடனே என்ன சொல்கிறார், ஓ! முதலியாரா தனலு தீசினாடா (உதை வாங்கினான்) போனிபோ(போகட்டும் போ) என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறார்! ஆனால் இம்மாதிரி ஒரு கிருஸ்துவ மதத்தினரிலோ, இஸ்லாம் மதத்தினரிலோ நடக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்! அது தான் முடியாது. முஸ்லீம் ஒருத்தனை அடிச்சுப்பாரு. அவ்வளவு தான் எங்கே இருக்கும் முஸ்லீம்களும் கிளம்பி விடுவார். "ஆவ்ரே ஆவ்" என்று சொல்லி தலையில் உள்ள தொப்பியை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பி விடுவான்! கொன்றேவோ? எவன்டா அவன் அடித்தான் "ஆவ் ஆவ்" வா, வா என்று சொல்லி கிளம்பி விடுவார்கள்! காரணம் உலகம் முழுவதும் முஸ்லீம் மதம் என்றால் அது ஒரே முஸ்லீம் மதம் தான்!

வள்ளுவர் சொல்லுகின்ற வாக்கியங்களை ஓரளவு கவனித்திருந்தால் இந்த ஜாதி சனியனில்லை. ஒரு கிருஸ்துவன் எப்படி பைபிலை அறிவானோ, எப்படி ஒரு முஸ்லீம் குர்ானை அறிவானோ, எப்படி ஒரு வைணவன் பிரபந்தத்தை அறிவானோ, எப்படி ஒரு சைவன் பெரிய புராணத்தை அறிவானோ அதுபோல் தமிழன் ஒவ்வொருவனும்குறளை அறிந்திருக்க வேண்டும்.

பாரதியார் உலகினுக்கே வள்ளுவனைத் தந்த வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று கூறியுள்ளார்.

ஸ்ரீ ரங்கத்திலே இருக்கும் ரங்கநாதர் எப்படி படுத்திருக்கிறார். கிழக்கு திசை பக்கமாக தலையை வைத்து மேற்கு பக்கமாக பாதத்தை நீட்டி தென் திசையில் உள்ள இலங்கையைப் பார்த்துக் கொண்டு வடக்குப் பக்கமாக முதுகை காட்டிக் கொண்டிருக்கிறார். முதுகை யாருக்கு காட்டிக் கொண்டிருக்கிறார் — நேருவுக்கு! ரங்கநாதர் கூட நேருவை பார்க்க மாட்டேனென்கிறார். ரங்கனாதரே வடக்கைப் பார்க்க மறுக்கிறார் என்றால் இந்த மா, பொ.சி. சொல்லுகிறார் திராவிட முன்னேற்றக் கழகத்தை பஞ்சடிக்கிற மாதிரி அடிச்சுடப் போறாராம். அப்ப இவரு என்ன பஞ்சடிக்கிற வேலை செய்து வந்தாரா? இது எப்படி இருக்கிறது என்றால் இரண்டு காலும் இல்லாத நொண்டி இந்த மரத்திலிருக்கும் எல்லா பழத்தையும் காலைக்குள்ளே இறக்கி விடுகிறேன் என்பது போல இருக்கிறது.

உங்கிட்ட (ம, பொ, சி.) ஒரு இழவும் இல்லை. நீ சொல்றே திராவிட முன்னேற்றக் கழகத்தை பஞ்சடிக்கிற மாதிரி அடிக்கப் போறேன் என்று. உன் பின்னாலே வருவதற்கு நாலு ஆள் கிடையாது, நீ செத்தா கூட உன்னைத் தூக்க நாலு ஆளை நாங்க அனுப்பனும், என்னமோ இருந்தானே போயிட்டானே என்று உன்னைத் தூக்க நாலுஆள்—ஐந்தாவது கொள்ளி போட ஒரு ஆளைத் தேடனும். நீ சொல்கிறாய் திராவிட முன்னேற்றக் கழகத்தை பஞ்சடிக்கிற மாதிரி அடிக்கப்போகிறேன் என்ற உங்கிட்ட இருந்தது ஒண்ணே முக்கா ஆள் அதிலே ஒண்ணே கால் ஆள் அம்பேல், திருத்தணி எல்லையிலே கொண்டு போய் விநாயகத்தை நிறுத்தினாய். அவர் காங்கிரஸ் கொல்லையிலே போய் நின்று விட்டார்.

உன்னாலா எங்கள் கழகத்தை ஒழித்து விட முடியும், கழகம், இன்று நேற்று தோன்றியதா? இருபது ஆண்டு காலத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் பெரியார் இடத்திலிருந்து பயிற்சி பெற்ற கழகம். திராவிட முன்னேற்றக் கழகம்—முதலிலேயே திராவிட முன்னேற்றக் கழகமாக ஆரம்பிக்கப்படவில்லை சுமார் இருபது ஆண்டு காலத்திற்கு முன் சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது பின்னர் திராவிடர் கழகமாக ஆயிற்று. அதிலிருந்து வந்தது தான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆலமரத்தைப் போல் தழைத்துள்ள இப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை தான் நீ ஒழித்து விடுவேன், என்கிறாய்! திராவிட முன்னேற்றக் கழகமாகிய ஆலமரம் எங்கே, அருகம்புல் போன்ற உன் தமிழரசுக் கழகம் எங்கே,

சர்க்காரைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் எவ்வளவோ சொல்லலாம். சமீபத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நியாய விலைக் கடைகள் என்பதைப் பாருங்கள், இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளவை தான் நியாய விலைக் கடைகள் என்றால் முன்னால் இருந்ததெல்லாம் அநியாய விலைக் கடைகளா என்று கேட்கிறேன். இந்தத் தெருவிலே அவரு ஒருத்தர் தான் யோக்கியன் என்றால் மற்றவங்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்று தானே அர்த்தம். அண்ணன் தம்பி நாலு பேரிலே இவர் தான் மூத்தவர் என்று சொன்னால் மற்றவங்கள் எல்லாம் இவருக்கு இளையவர்கள் என்று தானே அர்த்தம். இப்போது ஆரம்பிக்கப்பட்டவைகள் நியாய விலை கடை என்றால் இதற்கு முன் இருந்தகடையெல்லாம் அநியாய விலைக்கடைகள் தானே. அப்படி அநியாயவிலைக் கடைகளை வைத்திருந்தவர்களை சர்க்கார் ஏன் பிடிக்காமல் இருந்தது, எப்படிப் பிடிப்பார்கள், அவன் தான் கடையிலே காந்தி படம், ஜனாதிபதி படம், நேரு படம் மூன்று படங்களையும் மாட்டி விடுகிறானே. இது போதாதென்று கடைமேலே மூவர்ணக் கொடியைக் கட்டி இருக்கிறான். எவராவது அதிகாரிகள் வருகிறார்கள் என்றால் உடனே மடியிலே வைத்து இருக்கும் காந்தி குல்லாவை தலையில் போட்டுக் கொண்டு போலோ மகாத்மா காந்திக்கு ஜே என்று உரக்க கத்துகிறான். அப்படி இருக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

கடைசி முத்தம்!

பாலை-கண்ணன்

வானத்துச் செங்கதிரான் ஒளிச் சுருக்கி
வார்கடலில் விழுகின்ற மாலை நேரம்!
மானத்தை—தென்பொதிகைச் சந்தனத்தின்
மணமதனைச் சுமந்துவரும் தென்றல் நாடி
தேனருவி இசையெழுப்பும் சோலை யிடையே
திகழ்ந்திருந்த மேடைமிசை யமர்ந்திருந்தேன்!
மீன்விழியாள் எனைக்கொல்லும் ஆற்றல் மிக்க
மெல்லியலாள் அமுதவல்லி எதிரே வந்தாள்!
"திருவிடத்துச் செந்தமிழிற் பாட்டுப் பாடும்
தேமொழியே! காவியமே! கருத்துக் குன்றே!
அறிவுரையால் தென்னகத்தைத் திருத்து கின்ற
அறிஞர்தம் பாசறையில் வளரும் பெண்ணே!
பொறுத்திருந்தேன்! உனக்காகக் காத்திருந்தேன்!
புதுமலரே! உனக் கென்னைத் தந்துவிட்டேன்!
இருட்டுதரும் நோயால்நான் ஏங்குகின்றேன்!
எழிலரசி! உன்னிதழைத் தருவாய்" என்றேன்!
"ஆணழகே! உமக்குஎனைத் தருவ தற்கு
அட்டியிலை; எனினும்நிபந் தனையொன் றுண்டு!
காணரிய பேரழகே! திராவிடத்தை
கொடியவராம் வடபுலத்தார் பிடியி னின்றும்
மாண்புடனே மீட்டிடவே நடக்கும் போரில்
மானத்தைக் காப்பதற்குப் பங்கைப் பெற்று
வேணவரக்கொண் டேநீங்கள் உழைத்தல் வேண்டும்!
வெறும்பேச்சுப் பேசுவதால் பயனே இல்லை!
தாய்நாடு தீக்கு இரை யாகும்போது
தார்வேந்தன் நீரோயாழ் இசைத் திருந்த
பேய்க்காட்சி தனைக்கதையில் படித்த துண்டு!
பெருமைமிகு இந்நாட்டார் நாட்டை மீட்க
ஓய்வின்றி யுழைத்தகதை உயிரை யீந்த
ஒப்பற்ற வரலாற்றை உணர்ந்தும் நீங்கள்
வாய்மூடி நாட்டுணர்வே சற்று மின்றி
வந்துவிட்டீர் முத்தமிட; வெட்க மில்லை?"
எனவுரைத்தாள் பெண்ணரசி! அதனைக் கேட்டு
"எண்ணத்தில் நாட்டுணர்வை யூட்டி விட்ட
பனைவெல்ல மொழியாளே! கோரிக்கையை
பாங்குடனே முடிப்பதற்கு உறுதி யேற்றேன்!
எனை வளர்க்கும் மொழிகாக்க நாட்டைக் காக்க
இப்போதே புறப்பட்டேன் களத்தை நோக்கி!
பனிமலரே! காதலியே! எதற்கும் உன்றன்
பவளஇத ழாற்கடைசி முத்தம்" என்றேன்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மோடு வாழ, வசதியோடுவாழ, உல்லாசத்தோடு வாழ, பெண்டு பிள்ளைகளோடு சுகமாக வாழ பத்து இலட்சம் செலவழிக்கப்படுகிறது! இலங்கை அகதிகளுக்கோ இங்கு நுழையவும் அனுமதிக்கப்படவில்லை! இது ஏன்? காரணமென்ன? "இதற்குப் பெயர்தான் வடக்கு, தெற்கு இது தெரியவில்லையோ" என்கிறார் நேரு!

திபெத் அகதிகளின் சிறுவர்களுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறது இளைஞர்களாக உள்ள லாமாக்களுக்கு எழுத்தறிவு போதிக்கப்படுகிறது, வாழ்வு அளிக்கப்படுகிறது!

இலங்கை அகதிகளோ, இலங்கை நாடுகளிலே பதுங்கி, பதுங்கி, வாடி வதங்கி வாழ்கிறார்கள்! இது ஏன்? எதனால்? என்ன காரணம்! "முட்டாள்களே! இதுவா இன்னும் புரியவில்லை! இதற்குப் பெயர்தான் வடக்கு. தெற்கு என்று நேரு துரை சொல்லாமல் சொல்லுகிறார்!

திபெத் நாட்டிலிருந்துவரும் அகதிகள் இந்த நாட்டில் பிறக்காதவர்கள் எந்த நாட்டிலிருந்தோ வரும் அகதிகள்! இலங்கையிலிருந்துவரும் அகதிகள் தென்னாட்டார்கள், நிதி அமைச்சர்கள் பரம்பரைகள்! இதைத்தான் வெவ்வேறு பிரச்னை என்று சுருக்கமாக நேரு விளக்கி இருக்கிறார்!

கட்டத் துணியின்றி, இலங்கைக் காடுகளிலே சுற்றித் திரியும் தமிழ் மக்களுக்கு இங்கு இடமில்லை!

திபெத்து மக்களுக்கு பொன்னாடை போர்த்தப்படுகிறது! இலட்சம், இலட்சமாக செலவழிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வுக்கு வளம் கூட்டப்படுகிறது!

தமிழ் நாட்டான் இலங்கைத் தீவிலே பிச்சை எடுக்கிறான்! பண்டாரநாயகாவின் காலடியில் மிதிபட்டு செத்து மடிகிறான்! கேட்க நாதியில்லை, அவர்களுக்கு வாழ்வளிக்க உரிமையில்லை! சுதந்திரம் ஒரு கேடா நமக்கு! என்ன வேண்டி இருக்கிறது சுயராஜ்யம்! என்ன வேண்டி இருக்கிறது விடுதலை! என்ன வேண்டி இருக்கிறது சொந்த ஆட்சி!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியத்தின் பரம்பரை "சோறு சோறு" என்று வேற்றான் நாட்டிலே, மாற்றான் மண்ணிலே அலைந்து, திரிந்து கதறுகிறார்கள்! நேருவின் பரம்பரையோ திபெத்து நாட்டிலிருந்து வந்து இங்கே கும்மாளம் போடுகிறார்கள்! என்ன வாழ்கிறது சுயராஜ்யம்! என்ன வேண்டி இருக்கிறது சுதந்திரம்!

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்க வக்கற்ற சுப்பிரமணியம், வழியற்ற சுப்பிரமணியம் வீருப்பு வேறு பேசுகிறார்! தென்னாடும், வட நாடும் ஒன்றுதான் என்று கூறுகிறார்!

அமைச்சரே! கனம் நிதி அமைச்சரே! தென்னாடும், வடநாடும் ஒன்று என்றால் நமக்கு சம்பந்தமே இல்லாத திபெத்து அகதிகளுக்கு அளிக்கப்படும் உல்லாச வாழ்வைப்போல் தென்னாட்டு இலங்கை அகதிகளுக்கும் வாழ்வளிக்க முன்வருவீரா?

தென்னாடும், வடநாடும் ஒன்று என்றால் திபெத் அகதிகளை வரவேற்றதுபோல், வாழ்வளித்தது போல் தென்னாட்டு இலங்கை அகதிகளையும் வரவேற்று, வாழ்வளிக்க முன்வருவீரா? முடியுமா உம்மால்? முடிந்தால் செய்யும்! செய்துவிட்டு சொல்லும் "தென்னாடும், வடநாடும் ஒன்றுதான்" என்று!

நேரு துரையவர்கள் பன்னிப் பன்னி வடநாடு வேறு, தென்னாடு வேறு என்று செயலால், ஆளும் முறையால் காட்டி நம்மை ஒதுக்கித் தள்ளும்போது—நீங்கள் ஏன் "ஒன்றுதான், ஒன்றுதான்" என்று ரோஷமில்லாமல, மானமில்லாமல் பேசுகிறீர்கள்!

மானத்தைவிட, மரியாதையைவிட பதவிதானா பெரிது! அப்படி என்றால் எத்தனை காலத்திற்குதான் இந்தப் பதவி சதமாக நிலைத்து நிற்கப் போகிறது!

யோசித்துப் பாருங்கள்! பின்னால் யோசிப்பது பலன் தராது, பயன் தராது! பின்புத்தி படைத்தவங்கள் தமிழர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டுங்கள்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரு காலம் வரையினாவது காங்கிரஸ் ஆட்சி புரியும்—இந்தியத் துணைக் கண்டம் ஒரே நாடாகம் இருக்கும் என்று பலர் கனவு கண்டு கொண்டு வந்தனர்! அந்த கனவு வெறும் பகற் கனவு என்பதை அவர்கள் கண்ணால் காணும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

இன்னும் ஐந்தே ஆண்டு காலத்தில் காங்கிரஸ் அழியும்! இந்திய நாடு ஒரு பெரும் பிரளயத்தில் மூழ்கித் தத்தளிக்கும்!

புயல்! பூகம்பம்! சூறாவளிக் காற்று! ஐயய்யோ! நினைத்தாலே பயங்கரம்! சொன்னாலே நடுக்கம்!

இந்திய நாடு அழியும், சர்வாதிகாரம் சாயும்! பொருமை, பொச்செரிப்பு எல்லாம் தரை மட்டமாகும்!

ஆம்! அந்தப் புரட்சிப் பெருநாளில் தான் நம் திராவிடமும் மலரும்!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

22-8-59 சனிக்கிழமை

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை

சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும்

தலைவர்:
சு. ஆறுமுகம், பி.ஏ (பி.எல்.) எம் சி.
(துணைத்தலைவர், கோவை. நகராட்சி மன்றம்)

திறப்பாளர்:
எஸ். டி. சோமசுந்தரம். (பி.இ.)
(அண்ணாமலை பல்கலைக் கழகம்)

கோவை. செழியன், பி. ஏ.
பி. இராசமாணிக்கம், பி. ஏ. (பி. எல்.)
பி. எஸ். மணியம், பி, ஏ. (பி.எல்.)
உ. கணபதி, எம். ஏ.
எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.
கே. ஏ. பழனிசாமி, பி. ஏ. பி. எல்.
மா. பாண்டியன்,
ஏ. பெரியசாமி, பி.ஏ.பி.டி.
சி. என். ஏ. பரிமளம்,
சற்குணம்,
அப்துல்காதர், பி.எஸ்.ஸி.,
மு. சக்ரபாணி, (பி, ஏ. ஆனர்ஸ்)
தி. அழகிரிசாமி, (பி, ஏ. ஆனர்ஸ்)
இந்திரசித், (பி.ஏ.)
தி. ரா. விசுவநாதன், (பி, காம்,)
அரும்பன்,
பி. ஏ. ராஜாராம், (பி. ஏ. ஆனர்ஸ்)

வெ. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ. (பி.எல்.)
உ. பில்லப்பன், எம் ஏ.
சவுந்தரராஜன், பி. ஏ. (பி.எல்.)
கே. ஏ. கிருஷ்ணசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்)
சு. ரா. பாலசுப்பிரமணியம், பி, ஏ. (ஆனர்ஸ்)
இ. கிருஷ்ணன், (பி. எஸ்.ஸி.)
சங்கரபாண்டியன் பி. ஏ. (பி. எல்)
டி. கே. கோபாலகிருஷ்ணன், (எம். ஏ.)
என். வி. என்: சோமு, (பி. ஏ.)
பானுமதி
சீ. சோமசுந்தரம், பி. ஏ.
மோசஸ், பி. ஏ.
சா. பெ. மலைச்சாமி, (பி. ஏ. ஆனர்ஸ்)
ஆ. கலைக்குயிலன், பி, ஏ.
சத்தியநாதன்,
சேதுராமன், பி. ஏ.

ஆகியோர் பேசுவர்

நன்கொடை அணா 8.

இன்னிசையுடன் மாநாடு துவங்கும்

திராவிட மாணவர் படையே! திரண்டு வருக!

வெ. நாமநாதன்
பொருளாளர்

நா. இராமானுசம், பி. காம்.
ப. நெடுமாறன், பி.ஏ. (ஆனர்ஸ்)
வி. மா. வெற்றிவேந்தன்,
மதிவாணன்,
கா. வேழவேந்தன்,
செயலாளர்கள்

டி. கே. பொன்னுவேலு, பி. ஏ.
வ. கு. தலைவர்

ஐந்தே ஆண்டில் காங்கிரஸ் அழியும்!

விரைவில் ஒரு பெரும் பிரளயம் ஏற்படும்!

அந்தப் பெரும் புரட்சியிலே திராவிடம் மலர்வது திண்ணம் !

கேரளத்தை ஆண்டு வந்த கம்யூனிஸ்டு சர்க்கார் மீது காங்கிரஸ்காரர்களும், சில பதவிபித்தர்களும் ஒன்று சேர்ந்து இல்லாத குற்றச்சாட்டுக்களை எல்லாம் சுமத்தி, அந்த நாட்டு சர்க்காரையும் விரட்டியடித்து ஜனாதிபதியின் ஆட்சியையும் ஏற்படுத்தி ஜனநாயகத்தை படுகொலை செய்து விட்டு எக்களிப்போடு உலாவி வருகிற இந்த நேரத்தில் தான் ஆட்சி புரியும் காங்கிரஸ் கட்சியினருக்கு இடிமேல் இடி விழுந்து கொண்டிருக்கிறது!

கம்யூனிஸ்டு சர்க்கார் மீது எந்த காங்கிரஸ்காரர்கள் என்னென்ன குற்றச்சாட்டுகளை சுமத்தினார்களோ அகே காங்கிரஸ் கட்சியினர், அதே குற்றச்சாட்டுகளை—அதைவிட கேவலமான குற்றச்சாட்டுகளை தங்கள் சர்க்கார் மீதே சாட்டி இருக்கின்றனர்!

உ. பி. மாநிலத்தை ஆட்சி புரிந்து வரும் காங்கிரஸ் அமைச்சரவை செய்துள்ள கேடுகளை காங்கிரஸ்காரர்களே சுட்டிக் காட்டி இருக்கின்றனர்!

காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்து வரும் "உ. பி. மாநிலத்தில் லஞ்சம் மலிந்து விட்டது. சுயநலம் எங்கும் தாண்டவமாடத் தொடங்கி விட்டது—அமைச்சர்கள் நாட்டைப்பற்றியோ, நாட்டு மக்களைப் பற்றியோ, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலைப்படவில்லை" என்று காங்கிரஸ் கண்ணியவான்களே குற்றம் சுமத்தி கண்டனக்கணைகளைத் தொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்! கேரளத்தைப் போல் உ. பி. மாநிலத்திலும் மத்திய சர்க்கார் தலையிட்டு ஜனாதிபதியின் ஆட்சியை ஏற்படுத்துமா? என்ற வினாவுக்கு இன்றில்லா விட்டாலும் நாளை பதில் சொல்லியே தீரவேண்டும்! அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் காங்கிரஸ் வீரர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்!

காந்தியாரின் தலைமையின்கீழ் ஒன்றுபட்டு வெள்ளைக்காரனை விரட்டியடிப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்ட பல உத்தம தியாகிகள் இன்றில்லை! இன்றில்லை என்றால் அவர்கள் உயிரோடு இல்லை என்பதல்ல பொருள்—காங்கிரஸ் கட்சியில் இன்றில்லை என்பதே அர்த்தமாகும்!

தண்டவாளத்தைப் பெயர்த்தோர், தடியடி பட்டோர், தந்தி கம்பிகளை அறுத்தோர். தபால் நிலையங்களை கொளுத்தியோர், சொத்துக்களை இழந்தோர், சுகபோகங்களைத் துறந்தோர், புளியமிலார் அடிவாங்கியோர் அனைவரும்—காங்கிரஸ் கட்சியின் தீய செயல்களைக் கண்டு மனமுடைந்து வெளியேறி விட்டார்கள்! காங்கிரசில் மிஞ்சியோர் பதவி வேட்டைக்காரர்கள்! கள்ளப் பர்மிட்டு பேர்வழிகள் தான்! வடிகட்டிப்பார்த்தால் சுத்தமான ஓரிருமுழம் கதர் துணிக்கூட இருப்பது அரிது என்றே சொல்ல வேண்டும்!

இந்த நிலையில் பதவி வேட்டைக்காரர்களுக்குள் பொறாமையும், பொச்சரிப்பும் ஏற்பட்டு "நீ மட்டுமா மந்திரி!. நானும் மந்திரிதான்" என்று போட்டியிட்டு நாட்டை இடுகாடாக்கி வருகின்றார்கள்! பதவி வேட்டைக்காரர்களிடையே ஏற்பட்டுள்ள சண்டையால் நாடு அழிகிறது. நாட்டு மக்கள் அழிகின்றார்கள்! இதன் விளைவாக நாடெங்கும் காங்கிரஸ்காரர்களின் ஊழல்கள் அம்பலமாகிக் கொண்டே வருகிறது! இந்த ஊழல்களை ஒழிக்க நாடெங்கும் ஒரு பெரும் கொந்தளிப்பும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது!

இந்தியத் துணைக்கண்டம் எங்கும் ஒரு பெரும் புரட்சி உருவாகிக் கொண்டு வருகிறது என்பதை காங்கிரஸ் நண்பர்கள் உணர வேண்டும்!

சென்னை மாநிலத்தை ஆட்சி புரிந்து வரும் காமராஜர் மந்திரி சபையின் மீது முத்துராமலிங்கத் தேவர் பல குற்றச் சாட்டுகளை சுமத்தி இருக்கிறார்! முத்துராமலிங்கத் தேவர் நல்லவரா? கெட்டவரா? என்பதல்ல இங்குளஎழும் பிரச்னை--முத்துராமலிங்கதேவர் சாட்டும் குற்றச்சாட்டுகள் உண்மையா? அல்லவா? என்பதே இங்கு எழும் கேள்வியாகும்?

முத்துராமலிங்கத்தேவர் வெள்ளைக்காரர்களின் குலாம் அல்ல! வெள்ளைக்காரனுடைய காலைக் கழுவி பாத பூஜை செய்தவருமல்ல! தனிநாடு கேட்பவரல்ல! திராவிடம் பிரியவேண்டும் என்று சொல்லுபவருமல்ல! வெள்ளைக்காரனை விரட்ட பல தியாகங்களைப் புரிந்தவர்! பல இன்னல்களை ஏற்று அல்லல் பட்டவர்! அவர் ஏன் இன்று காங்கிரசை எதிர்க்கிறார்? அவர் ஏன் காங்கிரஸ் மந்திரிசபை 'மீது குற்றச் சாட்டுகளை சுமத்துகிறார் என்ற வினாதான் வருங்காலப் புரட்சிக்கு வித்தாக அமைகிறது!

அதே போல் தென்னாட்டில் காங்கிரஸ் கட்சியையே உருவாக்கி அரும் பாடுபட்ட பெரும் தலைவர்களில் ஒருவரான ஆச்சாரியாரும் போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்! எதிர்க்கட்சி அமைத்து "காங்கிரசை குழிதோண்டிப் புதைப்பேன்' என்று வீரசபதம் செய்கிறார்!

தென்னாட்டில் காங்கிரசை வளர்த்த பெருமை நாயுடு, நாயக்கர், முதலியார் என்ற சாதிப் பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்டு விளங்கிய முப்பெருந் தலைவராவர்கள்!

அந்த காலத்தில் நாயக்கர் என்ற பெருமையோடு அழைக்கப்பட்டு வந்த நமது பெரியார் இராமசாமி காங்கிரசை எதிர்த்துப் போர்ப் பரணி பாடினார்! வெளியேறினார்! சுயமரியாதை இயக்கம் கண்டார்! தமிழ் நிலத்தையும் தன் உடமையாக்கிக் கொண்டார்! இது ஏன்? இந்த நிகழ்ச்சி நடைபெற்றக் காரணமென்ன? அடுத்தபடியாக இருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், திரு.வி, கல்யாணசுந்தரமும் (தமிழ்ப்பெரியார்) கடைசி காலத்தில் காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பு முன்னணியிலேயே செல்லத் தொடங்கினார்கள்! இது ஏன்? இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன?

இந்த முப்பெரும் தலைவர்களுக்கு அடுத்து வந்த காங்கிரஸ் தலைவர் ஆச்சாரியாரும் இன்று "சுதந்திர" கட்சி அமைத்து காங்கிரஸ் கட்சிக்கு சாவுமணி அடிக்க முன் வந்திருக்கிறார்! இது ஏன்? இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன?

உ.பி மாநிலத்திலும், சென்னை மாநிலத்திலும் காங்கிரஸ் மந்திரிகள் மீது எந்த குற்றச் சாட்டுகளை சுமத்தி வருகிறார்களோ அதே முறையில் பம்பாய் மாநில காங்கிரஸ் மந்திரி சபை மீதும் குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகின்றன!

பம்பாய் சட்ட மன்றத்தில் சம்யுக்த மராட்டிய சமதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூச்ச

(8-ம் பக்கம் பார்க்க)

பாண்டிச்சேரி எதிர்க் கட்சிகள் வசம்!

காங்கிரஸ் கவிழ்ந்தது!

காமராஜர் ஜோஸ்யம்!

புதுவை மாநிலத்தை காங்கிரஸ் கட்சி ஆட்சி புரியாது என்றும், புதுவை எதிர்க்கட்சிகளிடம் தான் போய்விடும் என்றும் காமராஜர் சொல்லாமல் சொல்லி இருக்கிறார்!

புதுவை மாநிலத்துத்தேர்தல்நிலவரங்களை அறிந்துவந்த காமராஜர் சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் இந்தத் தகவல்களை தெரிவித்தார்! பத்திரிகை நிருபர்களிடம் அவர் கூறியதாவது. புதுச்சேரி மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு 19 ஸ்தானங்கள் கிடைக்குமென்றும்—அதாவது பாண்டிச்சேரியில் 8, காரைக்காலில் 8, மாகி, ஏனும் பகுதிகளில் மூன்றும் கிடைக்கும் என்றும் காமராஜர் கூறி இருக்கிறார்! அதாவது காங்கிரஸ் தோற்று விடும் என்று அறிவித்திருக்கிறார்!

எப்படி என்றால்—புதுவை மாநிலத்து சட்ட சபைக்கு மொத்த ஸ்தானங்கள் 39 காங்கிரஸ் கட்சிக்கு காமராஜர் சொல்லுகிற 19 ஸ்தானங்கள் கிடைத்தால் எதிர்க் கட்சிகளுக்கு 20 ஸ்தானங்கள் கிடைக்கும்! அப்போது காங்கிரஸ் மைனாரிட்டியாகிறது! எதிர்க் கட்சிகள் மெஜாரிட்டியாகிறது!

இதிலிருந்து புதுவை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பு எதிர்க் கட்சிகளிடம் வந்துவிடும் என்றும், காங்கிரஸ் கட்சி அங்கே எதிர்க் கட்சியாக அமரும் என்றும் தெரிய வருகிறது!

முன் கூட்டியே இந்த உண்மையை மக்களுக்கு அறிவித்த நமது முதலமைச்சருக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம்!

கரமராஜரின் இந்த ஜோஸ்யம் பலிக்கும்-பலிக்கட்டும்!

Registered as a Newspaper in CEYLON
Regd. No. M. 7074 **MALAIMANI** Phone No: 83285

கதர்க் கொடியைக் காட்டி, காந்திக் குல்லாவைக் காட்டி மிரட்டுகிறார்கள்!

அதிகாரிகளோ அஞ்சி நடுங்குகிறார்கள்!

5-ம் பக்கம் தொடர்ச்சி

போது அவர்களை ஏன் சர்க்கார் பிடிக்கும். சர்க்கார் ஆளிடமே இந்தக் கடைகளை ஒப்படைக்கலாமென்றால் இவன் ஒரு அணா அரையணா என்று வாங்கினால் அவன் ஐந்து பத்து என்று வாங்குகிறான். ஏன் என்றால் இவன் வேட்டி கட்டிக் கொண்டிருக்கிறான். அவரு குழாய் மாட்டிக் கொண்டிருக்காரு. இது தான் போது ரயில்வே நிர்வாகத்தைப் பாருங்கள். எந்த ரயிலாவது குறிப்பிட்ட நேரத்திற்கு வருகிறதா? அது தான் கிடையாது. இந்த லட்சணத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு ரயில்வே கால அட்டவணை மாறுகிறது, என்ன மாறுதல். எங்கேயோ ஒரு வண்டி ஒரு ஐந்து நிமிஷம் முன்னமேயோ பின்னாலேயோ புறப்படும். இது தான் கால அட்டவணை மாறுதல். எங்கேயாவது நான் ஊருக்குப் போய் விட்டு வண்டியை பிடிப்பதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவது உண்டு. அப்போது அங்குள்ளவரைப் பார்த்து ஏன் சார் வண்டி வருமா என்று கேட்டால் வரும் என்பார். "எப்போ வரும்"? வரப்போ வரும். இது தான் பதில். வண்டி எப்போ வருமென்று கேட்டால் வரும்போது வரும் என்று சொல்வதற்கா ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் ஒரு கண்ட்ரோல், டெலிபோன் இதெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளையன் எவ்வளவு பொறுப்போடு நிர்வாகத்தை நடத்தினான் என்பதற்கு உதாரணம் ஒன்று சொல்கிறேன். கேளுங்கள் ஒரு தடவை பெங்களூர் எக்ஸ்பிரஸில் உள்ள சிற்றுண்டி பெட்டியை சேர்ந்த ஆள் ஒருவன் அவன் சப்ளை செய்த சாப்பாட்டிற்கு முதல் வகுப்பு பிரயாணியிடம் வாங்க வேண்டிய பத்தணாவை இரண்டாவது வகுப்பு பிரயாணிடமும் இரண்டாவதுவகுப்புப் பிரயாணியிடம் வாங்க வேண்டிய ஆறு அணாவை முதல் வகுப்பு பிரயாணிடமும், வாங்கி விட்டான். பெங்களூரில் அந்த பிரயாணிகளில் ஒருவர் இப்படித் தவறாக கட்டணம் வசூலிக்கப்பட்டதை அங்குள்ள குறிப்புப் புத்தகத்தில் எழுதி விட்டுப் போய் விட்டார், இந்த விஷயம் விசாரணைக்கு வந்தது. அப்போது நான் சண்டே அப்சர்வர் நிருபர் என்ற முறையில் இந்த வழக்கு விசாரணையை கவனிக்கச் சென்றேன். விசாரணையின் போது அந்த சிப்பந்தி வரவழைக்கப்பட்டான்.

அந்த விசாரணையில் சிப்பந்தி கீழ்கண்டவாறு விசாரிக்கப்பட்டார்.

கே: பெங்களூர் எக்ஸ்பிரஸ் சென்னையை விட்டு எப்போது புறப்படுகிறது?

ப: பகல் 12 மணிக்குப்புறப்படுகிறது.

கே: எத்தனை மணிக்கு பெங்களூருக்கு வந்து சேருகிறது?

ப: மாலை 6—10 மணிக்கு.

கே: பெங்களூருக்கும் சென்னைக்கும் உள்ள தூரம்?

ப: 222 மைல்

கே: தண்டவாளத்தின் அகலம்?

ப: இரண்டு அங்குலம்.

கே. அரக்கோணம், வாலாஜா, காட்பாடி, ஜோலார்பேட்டை குடியாத்தம் முதலிய ஜங்ஷனில் நின்ற பிறகு பெங்களூருக்கு 6-10க்கு வந்து சேருகிறதென்றால் எத்தனை மைல் வேகத்தில் வண்டி வருகிறது?

ப: அறுபது மைல் வேகத்தில் வருகிறது.

பெங்களூர் எக்ஸ்பிரஸ் செவ்வளவு சரியாக வந்து சேருகிறது. நீ பிரயாணிகளிடம் வசூலிக்க வேண்டிய சரியான தொகையை வசூலிக்க முடியவில்லை. ஆகையால் உன்னைசில காலம் சஸ்பெண்டு செய்கிறோம் என்று அந்த சிப்பந்தி சஸ்பெண்டு செய்யப்பட்டார். இது நிர்வாகமா? இன்று நடப்பது நிர்வாகமா?

நீ சொல்கிறாய் நாங்கள் தான் ஆளுவோம். உங்களுக்குத் தகுதியில்லை யென்று சொல்கிறாய்! நீங்கள் ஆண்டவர்கள் நாங்கள் கொஞ்ச காலம் ஆளுகிறோம் என்று சொல், அதைவிட்டு நாங்கள் தான் ஆளத் தகுதி வாய்ந்தவர்கள் என்று சொல்லாதே.

நீ போயிட்டே என்று வைச்சுக்க. அப்ப என்ன நாற்காலிகள் எல்லாம்காலியாகவா இருக்கும். நீயா போறியா? இல்லாவிட்டால் ஜனங்கள் உன்னை அனுப்பிடுவாங்க. இப்பத்தான் நகர சபையிலே அனுப்பிச்சுட்டாங்களே. அது மாதிரி சட்ட சபையிலிருந்தும் அனுப்பிடுவாங்க.

நீ கேக்கறே நகர சபையிலே என்ன சாதிச்சுட்டாங்க என்று? ஆறாந் தேதி கல்யாணம்! 7-ந் தேதி என்ன ஏதாவது உண்டா என்று கேட்கிற மாதிரி இருக்கிறது! என்ன சாதிக்கணும்? நீ செய்த தப்பு தண்டாவையெல்லாம் கண்டு பிடித்து நீ வைத்து விட்டுப்போன கடனை அடைத்துவிட்டு நாலு லட்சம் ரூபாயை மேற்கொண்டு வைத்திருக்கிறோம்! இதைவிட என்ன செய்ய வேணும்.

மேயர் ஏன் குளுகுளு வாசத்திற்கு போனார் என்று கேட்கிறாய்! மேயர் என்ன கார்ப்பரேஷனைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டா நீலகிரிக்குப் போனார்! நீ ஏண்டா வெற்றிலை பாக்கு திருடினாய் என்றால் நீ ஏண்டா சுண்ணாம்பு திருடினாய் என்று கேட்கிறாய். சுண்ணாம்பு கேட்கிறவனுக்கு சுண்ணாம்பு கொடுப்பதற்கு பதிலாக அவனாகவே எடுத்துக் கொண்டு போகட்டும் என்றுதானே சுண்ணாம்பு வைத்திருக்கிறான்! சோடாபுட்டி எடுத்துக்கொண்டு போவதற்காகவா வைத்திருக்கிறான்?

நீங்கள் எல்லோரும் எப்போது இந்தி போராட்டம், எப்போது இந்தி போரட்டம் என்று மிகவும் ஆவலுடன் கேட்கிறீர்கள்! இந்தி போராட்டம் ஆரம்பிக்கும்நாள் வெகு தொலைவில் இல்லை. இந்தியைப்பற்றிய அறிக்கை எப்போது டில்லி பாராளுமன்றத்திலே தாக்கல் செய்யப்படும் என்பதை தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்! நாம் பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு மரண யோகத்தையோ சித்த யோகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை! தயவு செய்து பொறுங்கள் இந்திப் போராட்டம் விரைவில் ஆரம்பமாகும்! தெற்கிலே விடுதலைப் போர் கிளம்பி விட்டதே என்று நேருவின் நெஞ்சம் கலங்கும் ஒரு நாள் வெகு தொலைவில் இல்லை! தமிழகத்தின் விலங்குகள் அறுத் தெரியப்படும் நாள் அருகிலேயே இருக்கிறது! நீங்கள் எல்லோரும் இந்திப் போராட்டத்திலே தென்னகத்தின் போர்க்களத்திலே குதிக்கக் காத்திருங்கள்! வெகு விரைவில் முரசொலி கேட்கும்! இந்திப் போராட்டம் துவக்குவோம்—வெற்றி காண்போம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்!

பூமி அதிரும், புயல் வீசும்!
இந்திய நாடும் அழியும்!

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

விட்டு சாவன் மந்திரி சபையை ராஜினமா செய்யும்படிக்கோரிப் பல குற்றச் சாட்டுகளையும் காட்டி இருக்கின்றனர்! "எல்லைத் தகராறு தீர்க்கப்படவில்லை—டில்லி சர்க்காருக்கு அடிபணிந்து பம்பாய் மாநில சர்க்கார் கிடக்கிறது, வரி கொடா இயக்கம் நடக்கிறது. இதையெல்லாம் இந்த மந்திரி சபை உணரவில்லை! எனவே உங்கள் ராஜினமாவைக் கோரி பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வருகின்றனர்' என்று கூறி சட்ட சபை கூட்டத்தையே ஒத்தி வைக்கும்படி செய்திருக்கிறார்கள்!

மராட்டிய மண்டலம் வேண்டுமென்ற முழக்கம் ஒரு பக்கத்திலே முழங்கிக் கொண்டிருக்கிறது!

குஜராத்திகள் வேறு உரிமைக் குரல் எழுப்புகின்றனர்!

மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் மந்திரி சபை மீது குற்றச் சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்றன! இம்மாதம் இருபதாம் நாள் மக்கள் சட்டத்தை மீற இருக்கின்றனர்! சர்க்கார் அலுவலங்களில் மறியல் நடத்தப் போகின்றனர்! பதுக்கப்பட்ட உணவுப் பொருள்களை கைப்பற்றி விற்பனை செய்ய மக்கள் புறப்பட்டு விட்டனர்! இது ஏன்? இதற்குக் காரணம் என்ன?

இந்தியத் துணைக் கண்ட [illegible] காங்கிரஸ் மந்திரி சபைகள் மீது குற்றச் சாட்டுகள் குவிந்து கொண்டே இருக்கின்றன! அவர்கள் குட்டுகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன!

இந்த நிலையில் தென்னகத்தில் ஒரு பெரும் புயல் உருவாகிக் கொண்டு வருகிறது!

தென்னாட்டை எல்லாத் துறைகளிலும் வஞ்சித்து, தென்னாட்டு மக்களின் வாழ்வில் மண்ணை அள்ளிப் போடும் வடநாட்டார்களை விரட்டியடிக்க ஒரு பெரும் புரட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது!

திராவிடம் விடுதலை முரசம் கொட்டுகிறது! போர்ப் பரணிபாடுகிறது!

இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாகி வரும் அரசியல் கொந்தளிப்பை கவனித்தால் விரைவில்—மிக விரைவில் ஒரு பெரும் பிரளயம் ஏற்பட்டே தீரும் என்பது உறுதியாகப் புலனாகிறது!

விடுதலை பெற்ற ஒரு பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே ஒரு பெரும் புரட்சி ஏற்படுகிறது!

6-ம் பக்கம் பார்க்க

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை
அலுவலகம் 1-35 வாணியர் தெரு. சென்னை-14